திருத்தப்பட்டது

செய்தி வெளியீடு எண்–940 நாள்–5.12.2009

# இலங்கை தமிழர்களுக்கு கலைஞர் அரசு என்றைக்கும் துணை நிற்கும் புழல்–அகதிகள் முகாமில் வசிக்கும் குடும்பங்களுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கி மாண்புமிகு துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உறுதி ! ! !

* * * * * * *

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (5.12.2009) புழல்– இலங்கை தமிழ் அகதிகள் முகாமில் வசிக்கும் 440 குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதி உதவித் திட்டத்தின் கீழ் ஒருவருக்கு ரூ.20 ஆயிரம் நிதி உதவி, ரூ.25 ஆயிரம் மதிப்பிலான விளையாட்டு உபகரணங்கள், ஈமச்சடங்கிற்கான நிதி உதவி, ஊனமுற்றோர் உதவித் தொகை ஆகியவற்றை வழங்கி பேசியதாவது :–

புழல் அகதிகள் முகாமில் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் உத்திரவிற்கிணங்க சாலை மற்றும் விளையாட்டுத் திடல் மேம்படுத்தப்பட்டுள்ளது. புதிய மின்கம்பம் அமைக்கப்பட்டுள்ளது. குளியலறை, கழிவறைகள் சீரமைக்கப்பட்டுள்ளது. முகாமை சுற்றியிருந்த முட்புதர்கள் அகற்றப்பட்டுள்ளன. முகாமில் உள்ளவர்களும் மருத்துவ சிகிச்சை பெற வசதியாக கலைஞர் காப்பீட்டுத் திட்டத்திற்காக புகைப்படம் எடுக்கும் பணி நடைபெற்றுவருகிறது. மேலும், ரூ.2 லட்சத்து 50 ஆயிரம் செலவில் புதிய ரேசன் கடை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். சுமார் ரூ. 8 கோடி செலவில் புதிய குடியிருப்புகள் கட்ட முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்படவுள்ளது. முதல்வர் கலைஞர் அவர்களின் உத்தரவுப்படி இன்று புழல் முகாமில் உள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் 440 இலவச வண்ணத்தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. திருமண உதவித் திட்டத்தின் கீழ் ஒருவருக்கு உதவித் தொகையாக ரூ. 20 ஆயிரமும், ஈமச்சடங்கு செலவிற்காக இரண்டு நபர்களுக்கு

தலா ரூ. 2,500 வீதம் ரூ. 5 ஆயிரமும், மாணவ மாணவியர்களுக்கு ரூ.25 ஆயிரம் மதிப்பிலான விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் வாழும் இலங்கைத் தமிழர்களின் துயரங்களை களைய கலைஞர் அரசு ரூ.100 கோடி நிதியினை ஒதுக்கி தமிழக மக்களுக்கு வழங்குவது போல் இலங்கைத் தமிழர்களுக்கும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப்பெட்டி, உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம், திருமண நிதி உதவித் திட்டம், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு இலவச பேருந்து பயண அட்டை, புதிய கான்கிரிட் வீடுகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அகதிகள் முகாம்களில் வசிப்பவர்களுக்கு விதிகளை தளர்த்தி ஓட்டுநர் உரிமம் வழங்க முதலமைச்சர் கலைஞர் உத்தரவிட்டுள்ளார். இலங்கை அகதிகளின் நல்வாழ்விற்காக கலைஞர் அரசு தொடர்ந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது. இலங்கை தமிழர்களுக்கு கலைஞர் அரசு என்றைக்கும் துணை நிற்கும்.

இவ்வாறு துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.கே.பி.பி.சாமி, சட்டமன்ற உறுப்பினர் திரு.இ.ஏ.பி.சிவாஜி, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பழனிகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

* * * * * * * * *

வெளியீடு—இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை,
தலைமைச் செயலகம், செ—9.